**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2024**
**P201 – மொழிபெயர்ப்பியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மொழிபெயர்ப்புக் கொள்கைகள் என்ற நூலின் ஆசிரியர் யார்?
2. பொதுவாக மொழிபெயர்ப்பு எத்தனை வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது?
3. உயிரோட்டமான மொழிபெயர்ப்பில் இடம் பெறும் அடிப்படைகள் யாவை?
4. இன்றைய தமிழ் வசனநடை என்ற நூலின் ஆசி'ரியர் யார்?
5. மொழி ஆக்கம் என்றால் என்ன?
6. தமிழ்ப் படைப்பாளிகளில் எவருடைய நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன?
7. எதைச் சிறந்த மொழிபெயர்ப்புச் சான்றாகக் காட்டலாம்?
8. 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்று கூறியவர் யார்?
9. தமிழ்மொழி எத்தகைய சொற்கள் செறிந்தது?
10. மரபிலக்கணம் குறிப்பிடும் நான்கு வகை பண்புப் பெயர்கள் யாவை?
11. சொல்லாக்க வளர்ச்சியில் எவை முக்கிய இடம்பெறுகின்றன?
12. தானியங்களை அளக்கப் பயன்படும் கலம் எவ்வாறு குறிக்கப்படுகிறது?
13. நான்காவது தமிழ் என்று அழைக்கப்படுவது யாது?
14. பகவத் கீதை எந்த நூற்றாண்டில் முதன் முதலாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது?
15. விளம்பரதாரர்கள் எந்த முறையில் சில சொற்களை உருவாக்குகின்றனர்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தன்வயமாக்கல் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
2. மொழிபெயர்ப்பு எத்தனை நோக்கங்களில் அமைகிறது? அவை யாவை?
3. தொல்காப்பியம் குறிப்பிடும் மொழிபெயர்ப்பு வரையறை என்ன?
4. மொழிபெயர்ப்பின் அறிவியல் சார்ந்த விளைவுகள் யாவை?
5. சொல்லாக்க முறைமைகளை விளக்குக.
6. பேச்சு வழக்கில் சொற்பொருள் மாற்றமடைவது எவ்வாறு நிகழ்கின்றது?
7. சிறந்த அறிவியல் மொழிபெயர்ப்புக்கு இலக்கணம் யாது?
8. திரைப்படத் துறையில் மொழிபெயர்ப்பின் தேவை குறித்துக் குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மொழிபெயர்ப்பின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளின் மொழிபெயர்ப்பு குறித்து எழுதுக.

2. (அ) அறிவியல் மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) சொல்லாக்க நெறிமுறைகள் குறித்து எழுதுக.

3. (அ) ஆட்சித் தமிழ் முன்னோடிகள் குறித்து கட்டுரை தருக.

(அல்லது)

(ஆ) விளம்பர மொழிபெயர்ப்புகளின் வகைகள் குறித்து எழுதுக.

❋❋ ❋